
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**


**Translated from BS 894**
**Published on Oct 7, 2016**


**பொருளடக்கம்**


நீதியும் பரிசுத்தமும் ................ 2

பயத்திற்கான நிவாரணம் ................ 10



**BS Tamil Version - 35** **2016**

**எல்லாவற்றிலும் தேவனை மகிமைப் படுத்துங்கள்**

# நீதியும் பரிசுத்தமும்

*Righteousness and Holiness*

"**மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.**" **(1 கொரி. 9 : 27).**

**ச**ரீரத்திற்கு அதாவது மாம்சத்திற்கு மரித்ததாக எண்ணப்படும் அதன் நிலைமையிலிருந்து எழுந்திருக்கக் கூடிய தன்மை அதற்கு உண்டு. ஆதலின் புதிய சுபாவமானது விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி, வெற்றி பெற்றதாக வெகுமதியை அடைய, அது முன்னேறிச் செல்வதைக் காத்துக் கொள்ள இடைவிடாது எச்சரிக்கையாயிருப்பது அவசியமாயிருக்கிறது. மாம்சத்துக்கு எதிராகப் புது மனம் செய்யும் இந்தப் போராட்டங்கள் விழுந்து போன சுபாவத்துக்குரிய பாவங்களுக்கும், பலவீனங்களுக்கும், எதிரானவைகளாயிருக்கிறது என்ற கருத்தில் அது அவசியமான போராட்டமாயிருக்கிறது. "**நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்**" (2 கொரி. 5 : 6) என்று அப்போஸ்தலன் கூறுகிறபடி கிறிஸ்தவனின் முழு ஓட்டமும் விசுவாச ஓட்டமாயிருக்கிறது என்ற கருத்தில் அவை விசுவாசப் போராட்டமாயிருக்கின்றன. தனக்கு சகாயஞ் செய்கிறவரான கர்த்தரிலும் அவருடைய வாக்குத்தத்தங்களிலும் விசுவாசம் வைத்துப் பழகினாலொழிய ஒருவனும் தனது சொந்த மாம்சத்துக்கும் அதன் மனச்சார்புகளுக்கும் விருப்பங்களுக்கும் எதிராக இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடியாதென்ற கருத்திலும், இது விசுவாசத்தின் போராட்டமாகும். "**நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.**"(மத். 11 : 29).

சரீரத்தை ஒடுக்குகிறதற்கும், அதைக் கீழ்ப்படுத்துகிறதற்கும் வித்தியாசம் உண்டு. சரீரமானது நம்மை அடக்கியாள எடுக்கும் முயற்சிகளை அடக்கும்போது நாம் சரீரத்தை ஒடுக்கி நமது உலகப் பற்றுகளை அதன் நோக்கத்திலிருந்து விலக்கி அதன் தாக்குதல்கள் நம்மிடம் செல்லாது என்று நிரூபிக்கிறோம். நாம் நமது புது இருதயம், புது மனம், புது சித்தம் ஆகியவற்றால் அதைக் கைப்பற்றி தேவ சித்தத்துக்கு அடிமையாக்கி சத்தியத்திற்கும், நீதிக்கும், பரிசுத்தத்துக்கும் ஊழியம் செய்யும்படிச் செய்யும்போது நாம் அதைக் கீழ்ப்படுத்துகிறோம். நித்திய ஜீவனைப் பெற மற்றக் காரியங்கள் செய்யப்பட வேண்டியதிருக்கும்போது ஜெயம் பெற இவை அவசியமாயிருக்கிறது. இவற்றில் எவர்கள் தவறுகிறார்களோ அவர்கள் ஜெயம் பெற மாட்டார்கள். அவனது அழைப்பின் பந்தயப் பொருள் சம்பந்தமாக அவன் புறம்பே தள்ளப்படுவான்.




நிச்சயமாகவே, யேகோவா தேவன் நீதியுள்ளவராயிருக்கிறார். மற்றவர்களிடத்தில் உள்ள எல்லா நீதிகளுக்கும் அவரே ஊற்றாயிருக்கிறார். "**அவர் நீதியும் செம்மையுமானவர்**" (உபா. 32 : 4); "**தேவனாகிய கர்த்தரிடத்திலே அநியாயம் இல்லை**" (2 நாளா. 19 : 7); "**கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார்**";"**நீதியும் நியாயமும்** (சத்தியம்) **உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்:**" "**கர்த்தர் உத்தமர், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லை**" "**கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்.**" (சங். 11 : 7; 89 : 14; 92 : 14; 145 : 17); "**கோபாக்கினையைச் செலுத்துகிற தேவன் அநீதராயிருக்கிறார் என்று சொல்லலாமா?... அப்படிச் சொல்லக்கூடாது. சொல்லக்கூடுமானால், தேவன் உலகத்தை நியாயந்தீர்ப்பதெப்படி?**" (ரோம. 3 : 5, 6). "**ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும், செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே.**" (எபி. 6 : 10).

மேலும் இயேசு மனிதனாவதற்கு முந்தின தம்முடைய ஜீவியத்திலும், மானிட ஜீவியாயிருந்த போதிலுங்கூட நீதிபராயிருந்தார். அவர் "**நீதிபரர்**" (அப். 7 : 52; 22 : 14). "**நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்.**" மேலும் அவர் "**பாவமில்லாதவராக**" இருந்தார். (எபி. 1 : 9; 4 : 15). அவர் உயிர்த்தெழுந்ததிலிருந்து, தெய்வீக ஜீவியான நீதிபரராக இருக்கிறார். "**நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து,**" அவர் இப்போது நமக்காக

**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Leon Snyder. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

பரிந்து பேசுகிறவரும் (1 யோவா. 2 : 1) நீதியான நியாயாதிபதியுமாயிருக்கிறார்; "**இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதி–பதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.**" (2 தீமோ. 4 : 8).

அநேகமாக, நீதியைப் பற்றி விவரிப்பதற்கு இது உகந்த சமயமாயிருக்கும். அது செம்மையான, குற்றமற்ற, நேர்மையான அல்லது நீதியுள்ளதாயிருக்கிற தன்மை அல்லது ஜீவிய நிலையாயிருக்கிறது. அது ஒருவருடைய இயல்பு மற்றும் ஒருவருடைய செயல்பாடு ஆகிய இரண்டும் தெய்வீக பிரமாணத்துடன் பூரண இசைவுடன் இருப்பதாகும். நீதி என்பது சரியானதைச் செய்வதைக் காட்டிலும் மேலானது; ஆயினும் அது முந்தினதும் சேர்ந்த சரியான இயல்பாகும். ஆம், நாம் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவின் பாடசாலையில் பயிற்றுவிக்கப்படுகிறவர்க–ளாக நம்முடைய ஜீவன் அதன்மீது சார்ந்திருப்பது போல வாழ்கிறோம்! அவ்வாறே அது நடைபெறுகிறது. யாரெல்லாம் அநீதியானதொன்றைச் செய்வதற்குப் பதிலாக, நஷ்டத்தை அனுபவிக்க விரும்புகிற அளவுக்கு நியாயத்தை (நீதி) செய்வதற்கு மனதில்லாதிருக் கிறார்களோ, அவர்கள் ராஜ்யத்தில் ஒரு பங்கையும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். ராஜ்யத்தை அடைய முயற்சி செய்வது போலவே நீதி, சத்தியம் மற்றும் தூய்மைக்கான ஒத்துணர்வை அடையவும் முயற்சி செய்ய வேண்டும். பிரதிஷ்டை செய்த விசுவாசிகளில் இதில் ஒன்றைக் கண்டடைகிறவர்கள், மற்றதையும் கண்டடைவார்கள். கிறிஸ்தவனுடைய நேரத்தில் அதிக மான அளவு தற்பரிசோதனை செய்வதற்கும் மற்றும் நீதியை தனக்குப் போதிப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட வேண்டும்; இவர்கள் மெய்யாகவே தேவனால் போதிக்கப் படுகிறார்கள். அவர்கள் தங்களுடைய பொதுவான வாழ்க் கையில் மட்டுமல்லாது, அவர்களுடைய வார்த்தைகள், செயல்கள் மற்றும் நினைவுகள் சம்பந்தமானவை களிலும்கூட நேர்மையாயிருக்கக் கற்றுக்கொள்கிறார்கள். தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளை கர்த்தரிடத்தில் நேர்மையாயிருக்க வேண்டும், சகோதரர்களிடத்தில் நேர்மையாயிருக்க வேண்டும், மேலும் தங்களுக்குள்ளும் நேர்மையாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் பாடசாலையில் இந்தப் பாடங்களைக் கற்று, தங்களுக்கு உரித்தாக்கிக் கொள்ளுகிற மாணாக்கர்கள் ராஜ்யத்தில் ஒரு சுதந்திரத்திற்காக ஆயத்தப்படுத்தப் படுகிறார்கள்.

மனுக்குலம் எப்போதாவது தேவனுடைய பார்வை–யில் நீதிமானாக்கப்பட்டு, பூரணமாக்கப்பட்டு, நீதியுள்ள தாக்கப்பட்டு இயல்பு மற்றும் நடைமுறை இரண்டிலும் தேவனுடைய பிரமாணத்துடன் பூரண இசைவுடன் இருக்குமா? என்று நாம் கேட்கலாம். ஆம், அப்போஸ்–தலன் பவுல் விவரிக்கிறார் (கலா. 4:4,5), "**நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி** (குமாரராகும்படி) **நியாயப் பிரமாணத்திற்குக்** (நியாயப்பிரமாண உடன்படிக்கை) **கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக,**




(இஸ்ரயேலர்கள் – ரோம. 2:11–13; 3:19–23) **காலம் நிறை வேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும், நியாயப்பிரமாணத் திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.**" அந்த நியாயப்பிரமாணத்தினால் ஆக் கினைத் தீர்ப்புக்குட்பட்டவர்களை மீட்டுக்கொள்ளும்படியாக இயேசு நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழ்ப்பட்ட–வராய் பிறந்தார். (கலா. 3 : 10–13; ரோம. 10 : 4, 5) அவர் ஆதாமுக்குள் ஆதியில் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்ட உலக மனுக்குலம் அனைத்தையும் மீட்டுக்கொண்ட அதே மீட்கும் பொருள் பலியினைக் கொண்டு அவர்களையும் அவர் மீட்டுக்கொண்டார். ஆதாமுக்காக அவர் தம்முடைய பூரணமான மனுஷீக ஜீவனை சரிநிகரான விலைக் கிரயமாகக் கொடுத்தார்; "**என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு, தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப் பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமை–யினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்.**" (எபி. 2 : 9). ரோம. 5 : 12–21; 1 தீமோ. 2 : 3–6 வசனங் களையும்கூட பார்க்கவும்.

விழுந்து போன மனுக்குலம் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைப் பூரணமாகச் செய்வதன் மூலமாக நீதிமானாக்கப்பட முடியாது என்பதால், ஆதாமுக்காகவும், அவன் பாவஞ்செய்தபோது அவனுடைய அரையில் இருந்த சந்ததிக்காகவும், மீட்கும் பொருள் கிரயமாக இயேசு தம்முடைய ஜீவனைக் கொடுத்ததின் அடிப்படையில் விசுவாசத்தினால் அவர்கள் நீதிமான்களாக்கப்படும்படியான ஏற்பாட்டை அவர்களுக்–காகச் செய்தார். "**தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**" (யோவா. 3 : 16).

"**இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல்** (வேறு வகையில்) **தேவ நீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது, அதைக் குறித்து நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் சாட்சி–யிடுகிறது.** (உறுதிப்படுத்துகிறது); **அது இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே** பலிக்கும் தேவ நீதியே, (விசுவாசம் என்ற வார்த்தைக்கான வேதாகம அர்த்தங்கள் மூன்றில் ஒன்று உண்மையாயிருத்தல் என்பதாகும்) **விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும் அது பலிக்கும். வித்தியாசமே**

(வேறுபாடு) **இல்லை: எல்லாரும்** (யூதர்கள், நியாயப் பிரமாண உடன்படிக்கை மற்றும் அதன் ஆக்கினைத் தீர்ப்பின் கீழுள்ள யூதர்களும் மற்றும், அதன் கீழிராத புறஜாதியார் ஆகிய இருவருமே) **பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி,** (தகப்பனாகிய ஆதாம் பெற்றிருந்த தேவசாயலான மனுஷீக பூரணம்) **இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு** (விடுதலை, நீதிமானாக்கப்படுதல்) **நீதிமான்களாக்கப் படுகிறார்கள். தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்** (மன்னித்ததை) **குறித்துத் தம்முடைய** (தேவனுடைய) **நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசு–வினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை** [தேவன் தம்முடைய நீதியின் பிரமாணத்தை மீற முடியாது, ஆனால் இயேசு தம்முடைய சொந்த பூரண மனுஷீக ஜீவனை சரிநிகரான பிரதிக்கிரயமாக, மீட்கும் பொருள் – கிரயமாக, ஆதாமுக்காகவும், அவன் பாவஞ்செய்தபோது அவனது அரையில் இருந்த சந்ததிக்காகவும் பலியாக செலுத்தியதின் மூலம் ஆதாமின் சந்ததியில் விசுவாசிக்கிறவர்களை, நீதிமானாக்கும் (செம்மையாக்குதல்) போது தேவன் தம்முடைய சொந்த நீதியின் பிரமாணத்துக்கு முழு இசைவாக – நீதியுள்ளவராகவே இருக்கிறார்.] **நீதிமா–னாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், கிறிஸ்து இயேசு–வினுடைய இரத்தத்தைப் பற்றும்** (அவருடைய மீட்கும்பொருள் பலி) **விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக** (கிருபாசனம்) **அவரையே ஏற்படுத்தினார். இப்படியிருக்க, மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே எந்தப் பிரமாணத்தினாலே? கிரியாப்பிரமாணத்தினாலேயா? அல்ல விசுவாசப்பிரமாணத்தினாலேயே. ஆதலால் மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத் தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்."** (ரோம. 3 : 21-28).

உலகத்தாரின் ஆயிரம் வருட நியாயத்தீர்ப்பு நாளில், "**தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை** (பொதுவான மனுக்குலத்தார்) **நீதிமான்களாக்குகிறார்.**" (கலா. 3 : 8; பிலி. 2 : 10, 11), இது கீழ்ப்படிதலுடன் "**கிரியைகள்**" (வெளி. 20 : 12) ஒன்றிணைக்கப்பட்டுள்ளது; ஆயினும், அவர்களுடைய நீதிமானாக்கப்படுதல், தேவனுடன் அவர்கள் காரியங்கள் சரிசெய்யப்படுதல் ஆதாமில் இழந்து போன எல்லாவற்றையும் மெய்யான திரும்பக் கொடுத்தலாயிருக்கும். (அப். 3 : 19-23). அவர்கள் மேலும் மேலும் மேலுமாக உயர்த்தப்பட்டு மெய்யான மனுஷீக பூரணத்திற்கு – சரீரம், மனம், சன்மார்க்கம் மற்றும் மத சம்பந்தமானவைகளிலும் உயர்த்தப்படுவார்கள். ஆயிரம் வருடங்களின் "முடிவில்" மாபெரும் மத்தியஸ்தராகிய கிறிஸ்து, "**தேவனும் பிதாவு–மாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார்.**" (1 கொரி. 15 : 24-28); மேலும் உலகமனுக்குலத்தாரில் "**யாரெல்லாம் விரும்புகிறார்களோ**" அவர்கள் அனைவரும் அப்போது முழுமையான நீதியுள்ளவர்களாக, ஆம், பூமியின்மீது தேவனுடைய புத்திரர்களாக, அவருடன், ஆதாம் கொண்டிருந்தது போன்ற அதிக நேரடியான ஐக்கியத்திற்குள்ளாக பிரவேசிக்க ஆயத்தமாக இருப்பார்கள். (வெளி. 22 : 17; 21 : 3, 4).

இது இயேசு தம்முடைய சிலுவை மரணத்தால் "**மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும்** (உலகமனுக் குலத்தாருக்கு அதன் நியாயத்தீர்ப்பு நாளாகிய ஆயிர வருட யுகத்தில் பூரண மனுஷீக ஜீவன்) **சாவாமையையும்** (கிரேக்கு மொழியில் aphtharsia - அழியாமை) **சுவிசேஷத் தினாலே வெளியரங்கமாக்கினார்.**"(2 தீமோ. 1 : 10),அதனால் எவனும் "**ஜீவனுக்கென்று நீதிமானாக்கப்பட**" முடியும் – "**மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்.**" (யோவா. 5 : 24). மூப்பரான பாத்திரவான்கள் ஆதாமின் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டவர்களாகவே ஜீவித்து மரித்திருக்கிறார்கள்; அவர்களுடைய நீதிமானாக்கப்படுதல் ஐக்கியங்கொள்வதற்காக மட்டுமே இருந்தது.

வேதாகம அடையாள மொழியில், நிர்வாணம் என்பது உருவகமாக பாவம் மற்றும் பாவத்தினால் நிறைந்திருப்பதை வெளிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப் படுகிறது. "**இதோ, திருடனைப் போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக் கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான்**"(வெளி. 16 : 15); "**உன் நிர்வாணம் வெளிப்படும், உன் இலச்சை காணப்படும், நான் ஒருவனையும் பாராமல் நீதியைச் சரிக்கட்டுவேன்**" (ஏசா. 47 : 3). விசுவாசிக்கு கிறிஸ்துவின் நீதி சாட்டப்படுவதன் மூலமாக ஒரு வஸ்திரம்–போல இந்த உருவகமான நிர்வாணம் மூடப்படுகிறது. (ரோம. 4 : 5-8), நீதியானது நிர்வாணமாயிருக்கிற நிலைமைக்கு மாறாக வஸ்திரம் தரிப்பிக்கப்பட்ட அல்லது உடுத்துவிக்கப்பட்ட நிலைமையைக் குறித்துக் காட்டுகிறது. (யோபு 29 : 14). பூரண மனுஷ ஜீவியாக, நமக்காக பலியின் மரணத்தில் ஒப்புக் கொடுத்த, கிறிஸ்துவின் நீதியை நீதியின்வஸ்திரமாக நம்முடைய பரம பிதாவானவரே, ஏற்படுத்தி தந்து நம்முடைய அபூரணங்களை மூடுகிறார் ["**கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன், என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது, மணவாளன் ஆபரணங்–களினால் தன்னை அலங்கரித்துக் கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக் கொள்ளு கிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்.**" ஏசா. 61 : 10.] மேலும் தேவனுடைய பார்வையில் நம்மை நீதிமான்களாக்குகிறார். ("**அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள்.... அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும் மீட்புமானார்.**" 1 கொரி. 1 : 30, 31).

பரிசுத்தம் என்ற சொல் முழுமையடைதலை அடையாளப்படுத்துகிறது. நாம் இதற்கு ஒரு நீண்ட பொருள்விளக்கத்தை கொடுப்பதாக இருந்தால், பரிசுத்தம் என்பது இருதயம் மற்றும் மனதின் தன்மையும், அதன் மூலமாக பொதுவான மற்றும் சாதாரணமான தீமையான–வற்றிலிருந்து பிரிந்திருப்பதன் மூலமாகவும், நன்மை–யானது எதுவோ அதற்கு அர்ப்பணித்தலும், ஒருவனை

நன்மையான கோட்பாடுகளுக்கு இசைந்திருக்க அல்லது இசைந்திருக்கும்படி செய்வதுமாகும். அந்த இருதயம் மற்றும் மனதின் தன்மையானது தீமையிலிருந்து – பாவம், தப்பறை, தன்னயம் மற்றும் உலகத்தனத்தி-லிருந்து நம்மை வேறாகப் பிரிக்கிறது. நன்மையானது எதுவோ அதனை முன்னேற்றுவதற்காக நம்மை ஒப்புக் கொடுத்து நன்மைக்காக நம்மை அர்ப்பணிக்கவும் வேண்டும். நன்மையான, கோட்பாடுகளுக்கு இசைந் திருக்கும் அல்லது இசைந்திருக்கும்படிச் செய்த இந்த நிலைமையின் விளைவாக இருதயம் மற்றும் மனது இந்த நிலைமையை அடைகிறது. அதையே வேதாகமம் பரிசுத்தம் என்று அர்த்தப்படுத்துகிறது.

ஓ, பரிசுத்தம் என்பது சில வகைகளில் நீதியைக் காட்டிலும் அதிக விசாலமான வார்த்தையாகக் காணப் படுகிறது. அது நீதியை உள்ளடக்கியிருப்பதுடன், அவைகள் அடிக்கடி சிலரால் ஒன்றுக்கொன்று மாற்றாக-வும், ஏறக்குறைய ஒரே அர்த்தமுள்ளதாகவும் பயன் படுத்தப்படுகிறது. நீதிமானாக்கப்படாத சிலர் மற்ற உடன் மனிதர்களுடன் உள்ள தங்கள் நடவடிக்கைகளில் ஏறக்குறைய குற்றமற்றவர்களாகவும் நேர்மையுடனும், நியாயமாகவும், நடந்து கொள்கிறார்கள். எனவே ஒரு பங்கு நீதியுடையவர்கள் என்று சொல்லலாம்; ஆனால் அவர்களை நாம் பரிசுத்தமானவர்கள் என்று அழைக்கமாட்டோம். தற்காலிகமாக நீதிமான்களாக்கப்-பட்டவர்களையுங்கூட (வரம்புக்குட்பட்ட கருத்தில் தவிர) அவர்கள் நீதியுடையவர்களாக இருந்தபோதிலும் பரிசுத்த வான்கள் என்று அழைக்கமாட்டோம்.

இதன் முழுமையான ஆழ்ந்த கருத்தில், நாம் பிரதிஷ்டையின் காலத்தில் தெரிந்து கொண்ட வாழ்க்கை வழிமுறையாக பரிசுத்தத்தை படிப்படியாக கிட்டிச் சேருகிறோம். பிரதிஷ்டையின்போது நாம் அதனை பயிற்சி செய்ய பிரவேசிக்கிறோம், மேலும் நாம் நம்மை பாவம் மற்றும் தப்பறையிலிருந்து பிரித்து அவற்றிலிருந்து நம்மை விலக்கிக் காத்துக்கொள்ளும்போது, நாம் நம்மை சுயநலம் மற்றும் உலகத்தனத்திலிருந்துங்கூட விலக்கி, காத்துக்கொள்கிறோம்; அப்போது பரமபிதா நமக்கென்று ஏற்பாடு செய்கிற எல்லா வேலைகளுக்கும் நம்மை அர்ப்பணிக்க முடியும். இவைகளை நாம் செய்வோ மானால், நமது கர்த்தருடைய ஆயிர வருட மத்தியஸ் தராட்சியின் ராஜ்ய ஆசீர்வாதங்களின்கீழ் நாம் மெய்யாகவே பூரணமடைவோம் என்று நம்பிக்கை யுடனிருக்கலாம். நன்மைக்கென்று நாம் நம்மை அர்ப்பணிப்போமாக.

## தேவனே பரிசுத்தத்தின் ஊற்று

மிக உயர்ந்த கருத்தில், பரிசுத்தமானது யேகோவாவின் இயல்பாய் அமைந்த குணமும், அவரிடமிருந்து வருகிறதுமாயிருக்கிறது. ஏனெனில் அவர் பொதுவான மற்றும் சாதாரணமான தீமையிலிருந்து முற்றிலும் பிரிக்கப்பட்டு, நன்மையானவற்றோடு முழுமை யாக இசைந்திருக்கிறார். "**சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால்**



"நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்."–1 பேது. 1:14,15

**நிறைந்திருக்கிறது.**"(ஏசா. 6 : 3). "**நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்**" (1 யோவா. 2 : 20, டயக்லாட்). யேகோவா ஏசாயா தீர்க்க தரிசியின் மூலம் சொல்கிறார்: "**நித்தியவாசியும், பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமு மானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும், பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம் பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்.**"(ஏசா. 57 : 15). தேவன் தம்முடைய நீதியினால், தீமையை அருவருத்து, விலக்கி எதிர்க்கிறார்! அவருடைய பரிசுத்தத்தி னால் அவருடைய மனவிருப்பங்கள் யாவும் பரிபூரண சுத்தமாயிருக்கின்றன; அவைகளின் இயல்பான தன்மை யிலும், அவைகள் தங்களைப் பிணைத்துக் கொண்ட நோக்கங்களிலும், அவைகள் தங்களை வெளிப்படுத்துகிற விதத்திலும்கூட சுத்தமாகவே இருக்கின்றன.(E.Vol.1-God,பக். 67-69 பார்க்கவும்). தேவனுடைய குணாதிசய மானது பரிசுத்தமானதாகவும், ஒவ்வொரு வகையிலும் சன்மார்க்க பூரணத்தை உள்ளடக்கியிருக்கிறது; சாத்திய மான கறைகளிலிருந்து தொடர்பற்றதாக இருக்கிறது. அது பயபக்தியையும், பணிந்து கொள்ளுதலையும் வரவழைக் கிறது. பரிசுத்தம் என்பது தேவனுடைய சித்தத்தின் – தேவனுடைய இயல்பான குணாதிசயத்தின் உள்ளார்ந்த மற்றும் அடிப்படையான மனச்சார்புகளைக் குறித்துக் காட்டுகிறது. யேகோவா அக்கிரமத்திற்கு ஆதரவாக நோக்கிப் பார்க்கமாட்டார்; இதைக் குறித்து யாக்கோபு, "**சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப் படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக. தேவன் பொல்லாங்கி னால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக் கிறவருமல்ல.**" (யாக். 1 : 13) என்று சொல்கிறார். யேகோவா வின் பரிசுத்த குணவிஷேடத்தின் பண்புகளில் ஒன்றான நீதி என்பது கோட்பாட்டிலும், நடைமுறையிலும்கூட அவருடைய வழுவாத நீதியின் ஒருமைப்பாட்டைச் சுட்டிக்காட்டுகிறது.

தேவன் தம்முடைய சாயலின்படி சிருஷ்டிக்கும்போது அவர்களிடத்தில் தம்முடைய பரிசுத்த மனச்சார்பை பதியச் செய்கிறார். இயேசு "**பரிசுத்தமும்**" "**நீதியுமுள்ளவர்**" என்று இரண்டும் உடையவராகச் சுட்டிக்காட்டப்படுகிறார்.

(அப். 3 : 14); "**நீர் அபிஷேகம் பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசு**" (அப். 4 : 28) என்றும் ஏசா. 53 : 11, "**அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார், என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார், அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்**" என்றும் சொல்கிறது.

மேலும் தேவனுடைய தூதர்கள் (செய்தி அறிவிப்பவர்கள்) "**பரிசுத்தர்கள்**" என்று அழைக்கப்படுகின்றனர். (மத். 25 : 31; மாற். 8 : 38) அத்துடன் "**பரிசுத்தவான்கள்**" என்றும் அழைக்கப்படுகின்றனர். "**ஆவி தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.**" (ரோம. 8 : 27). அனனியா இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் சம்பந்தமாக "**பரிசுத்தவான்கள்**" Saints என்ற வார்த்தையை முதன் முதலில் பயன்படுத்தினார். நாம் நன்றாக புரிந்து கொள்ளுகிறபடி அந்த வார்த்தை "**பரிசுத்தர்கள்**" "**பரிசுத்தமாக்கப்பட்டவர்களைக்**" sanctified ones குறித்துக்காட்டுகிறது. நிச்சயமாகவே, தங்களுடைய எஜமானரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதாக அறிக்கை செய்கிற எல்லாருக்கும் இது தகுதியான பெயராயிருக்கிறது. எப்போதும் இது நமக்கு பொருந்துமோ இல்லையோ எப்படியாயிருந்தாலும் நாம் ஒவ்வொருவரும் இந்த பெயருக்கு பாத்திரவான்களாயிருக்க முயற்சி செய்வோமாக. "பரிசுத்தவான்கள்" என்ற சொல் கிரேக்க சொல்லான hagios - ஹாஜியோஸ் (பரிசுத்தவான்கள், அர்ப்பணித்தவர்கள் அல்லது பிரதிஷ்டை செய்தவர்கள்) என்பதிலிருந்து பெறப்பட்டது.

ஆம், ரோம. 12 : 1-ல் சொல்லப்பட்டபடி "**அப்படியிருக்க, சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை:**" இது இந்த காலத்திலும் தங்களைப் பிரதிஷ்டை செய்து, தங்கள் சரீரங்களை ஜீவ பலியாக அர்ப்பணிக்கிறவர்களுக்கு இன்னமும் பொருந்துகிறதாயிருக்கிறது. மேலும் மத். 16 : 24 காட்டுகிறபடி - தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, எஜமானனைப் பின்பற்றினால் மட்டுமே ஒருவன் அவருடைய சீஷனாக முடியும். "**அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.**" பொதுவான மற்றும் சாதாரணமான தீமையிலிருந்து பிரிந்திருப்பதற்குதக்கதாகவும், தேவனுக்கும், அவருடைய ஊழியத்துக்கும் முழுமையாக அர்ப்பணித்து, உணர்வை அருளுகிற அவருடைய பரிசுத்தாவியின் பாத்திரமாக 'பரிசுத்தர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் பொதுவான மற்றும் சாதாரணமான தீமைகளுக்குப் பயன்படுவதிலிருந்து அவர்கள் பிரிக்கப்பட்டு, தேவனுக்கும் அவருடைய ஊழியத்துக்கும் முற்றிலுமாக அர்ப்பணித்திருக்கும்போது குறிப்பிட்ட விதத்தில் அவருடைய பரிசுத்தத்திற்கு பங்குள்ளவர்களாகிறார்கள்.




## தேவன் நம்மை பரிசுத்தமாயிருப்பதற்கே அறிவுறுத்துகிறார்

தேவனுடைய பிள்ளைகள் அவருடைய பரிசுத்தமான மனப்பான்மையை அதிகமதிகமாக மனதில் கிரகித்துக் கொள்கிறார்கள். (எபே. 5 : 18). இது படிப்படியாக நடைபெறும் வேலை. "**.....தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.**" (ரோம. 12 : 2) "**உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கையெல்லாவற்றிலேயும்** (நடத்தை) **பரிசுத்தராயிருங்கள்:** (மாறுங்கள்) **ஏனெனில், நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்**" (ஆகுங்கள்) (1 பேது. 1 : 15, 16). நாம், "**பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே** (பயபக்தி) **பூரணப்படுத்தக்கடவோம்**" (2 கொரி. 7 : 1-ஐ 1 தெச. 3 : 13; 4 : 7 ஆகிய வசனங்களோடு கூட ஒப்பிட்டுப்பார்க்கவும். "**நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள் .... இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக் கொடுங்கள். பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன்**" (ரோம. 6 : 18-22) என்று அப்போஸ்தலன் விவரிக்கிறார்.

பரிசுத்தம் என்பது ஒருவன் தன் பையில் எப்போதும் வைத்திருக்கும் அல்லது செயினில் கழுத்தைச் சுற்றி அணிந்து கொண்டிருக்கும் பொருள் அல்ல அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப அணிந்து கொள்ளும் ஆடைகளுமல்ல. இது ஒரு உலோகத் துண்டை உறுதிப்படுத்துவதற்கு ஒத்திருந்தாலும் அதைவிட மேலானது. இது முழு கட்டமைப்புக்குள்ளும் பிரவேசித்து அதன் பொதுவான குணப்பண்புகளை மாற்றுகிறது. அதன் செல்வாக்கில் மாற்றம் பெறுகிறது. நாம், முதலாவதாக பாவத்திலிருந்து மனந்திரும்பி, மீட்பரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தேவனுக்கு நம்மைப் பிரதிஷ்டை செய்தபோது கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம்

நமக்கு அளிக்கப்படுகிறது. உண்மையில் அது கர்த்தருடைய ஜனங்களுக்கு ஆரம்பநிலை பரிசுத்தமாகுதலாக எண்ணப்படுகிறது. ஆனால் இது போதுமானதல்ல. நாம் விரும்பியபடி, நம்முடைய குணாதிசயங்களுக்குள்ளாக நாம் கிரியை நடப்பிக்க வேண்டும். அல்லது இதைக் குறித்து அப்போஸ்தலன் கூறுகிறபடி, தேவன் தம்முடைய பரிசுத்த சித்தத்தை நம்மில் கிரியை செய்யும்படி நாம் அனுமதிக்க வேண்டும். (பிலி. 2 : 13). சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் அனுமதிக்கிறபடி, பரிசுத்த நடத்தை நம்மில் உள்ள அவருடைய பரிசுத்த சித்தத்துடன் சேர்ந்து இணைந்திருப்பது மிகவும் அவசியமாகும். நாம் தேவனுடன் உடன் வேலையாட்களாயிருக்கிறோம். தேவன் "**இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களிலே நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிச் செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் பூரணப்படுத்துகிறார்.** (எபி. 13 : 21). "**நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே,**" "**அதிக பயத்தோடும் நடுக்கத் தோடும் நம்முடைய இரட்சிப்பு நிறைவேற நாம் பிரயாசப்பட வேண்டும்.**" (பிலி. 2 : 12; எபே. 3 : 20).

ஆகையால், நம்முடைய பரிசுத்தமாகுதலுக்கு பரிசுத்தம் செய்யப்படுவதற்கு ஒரு தொடக்க நிலையும் அத்துடன் ஒரு முடிவான நிலையும் இருப்பதை நாம் காண்கிறோம். அப்படியே நம்முடைய நீதிமானாகுதலில், நாம் நீதிமானாக்கப்பட்ட வழிவகையிலுள்ள முதலாவது செயல்பாடு - தேவன் நம்மை ஆதாமின்ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுவித்து, பூரணமானவர்களாக எண்ணுகிறார். இரண்டாவதாக, அந்த செயல்பாட்டின் விளைவாக, நம்முடைய மனுஷீகத்துக்குரியவை எல்லாம் பூரணமானவைகளாக எண்ணப்பட்டு, பலிக்குரிய பயன்களுக்காக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அவ்வாறே, நம்முடைய பரிசுத்தமாகுதல் அதாவது நாம் பரிசுத்தமுள்ளவர்களாக்கப்படுதல் வழிவகையிலுள்ள முதலாவது செயல்பாடு கர்த்தருக்கு பரிசுத்தமென்று பிரித்து வைப்பது, இரண்டாவதாக, அந்த செயல்பாட்டின் விளைவாக - இருதயம், மனம், சித்தம் ஆகியவற்றில் ஒரு பரிசுத்தமான நிலையும் தேவனிடத்தில் பயபக்தியாயிருப்பதின் காரணமாக பரிசுத்தமாகுதலும் பூரணமாகிறது.

நாம் பரிசுத்தத்தில் பூரணமாகும்போது, நாம் ஞானத்திலும், ஊழியத்திலும், கிருபையிலும் வளர வேண்டும். "**வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு**" (2 தீமோ. 2 : 15; 2 பேது. 3 : 18; கலா. 5 : 22, 23). இது கீழ்வரும் 7 பாகங்களை உள்ளடக்கியுள்ளது: **(1)** சுயத்துக்கும், உலகத்துக்கும் மரித்தல் **(2)** தேவனுடைய வார்த்தையைத் தியானித்தல்**(3)** விழிப்புடன் இருத்தல் **(4)** ஜெபம் **(5)** தேவனுடைய வார்த்தைக்கு இசைவாக குணத்தை விருத்தி செய்தல் **(6)** தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்திற்கு சாட்சியாயிருத்தல் **(7)** தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாயிருப்பதினிமித்தம்




பாடநுபவித்தல். இடையூறுகளைச் சந்தோஷமாக சகித்தல், "**தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது**"(எபி. 10 : 36; யாக். 1 : 14) என்ற வசனத்தின்படி நம்முடைய உடன்படிக்கையை காத்துக் கொள்வதிலுள்ள இந்த ஏழு பாகங்களையும் நம்மை நிறைவேற்றக் கூடியவர்களாக்கும். இந்த ஏழு பாகங்களையும் உண்மையுடன் நிறைவேற்றுவதன் பலனாக பரிசுத்தமாகுதல் பூரணமடையும். நாம் எல்லோரும் அதிகமதிகமாக நீதியையும், பரிசுத்தத்தையும் பெற்றுக் கொள்ளவும், காத்துக் கொள்ளவும் நாடுவோமாக!

என் அன்பு சகோதரர்களே, நாம் அறிவில் வளரும்போது, கிருபையிலும் வளர வேண்டியவர்களாயிருக்கிறோம். (2 பேது. 3 : 18). நாம் இந்த பாடத்தில் 2 தீமோ. 2 : 15 மற்றும் ரோம. 12 : 2 வசனங்களின் கருத்துக்களை ஆராய்ந்தோம். தேவனிடத்திலிருந்து வருகிற இந்த புத்திமதிகளை நாம் தொடர்ந்தேர்ச்சியாக அபிவிருத்தியும் பயிற்சியும் செய்து நீதி மற்றும் பரிசுத்தத்தின் கோட்பாடுகளை மதித்து பாராட்டுவதிலும் நாம் வளர்ச்சியடைவது நம்மை அதிகமதிகமாக பெருகச் செய்யும் (1 கொரி. 16 : 13). தெய்வீக குணாதிசயத்தின் இந்த அடிப்படைக் கோட்பாடுகளின் பேரிலுள்ள அன்பில் நாம் எந்த அளவுக்கு அதிகமாக வளருகிறோமோ, அந்த அளவுக்கு அதிகமாக, நாம் நம்முடைய இருதயங்களில் நன்மையான கோட்பாடுகளைப் பெற்றிருப்போம். தேவனிடத்தில் பூரணமாக குறித்துக் காட்டப்படுகிற, அவைகள் மூலமாகவே அவர் நம்முடைய மனக் கண்களுக்கு வெளிப்படுகிறார். நீதி மற்றும் கடமை அன்பு இவற்றின் மீது மாத்திரமல்லாமல் அவருடைய நீதி மற்றும் பரிசுத்தத்தின் நன்மையான கோட்பாடுகள் எல்லாவற்றின் மீதுள்ள பிரியத்தின் அடிப்படையில் நாம் அதிகமதிகமாக தேவனிடத்தில் பிரதிபலன் பாரா அன்பில் வளருகிறோம்.

தேவன் மற்றும் கிறிஸ்துவின் குணாதிசயத்தின் மதிப்புணர்ந்து போற்றும் அன்பு வளர்ச்சி பெறுவதால், அவர்களுடைய குணாதிசயத்தின் அகலமும், நீளமும், ஆழமும், உயரத்தையும் நாம் இன்னதென்று உணர்ந்து கொள்ளாவிட்டாலும் கூட, (எபே. 3 : 17-19) வசனம் 19 சொல்கிறபடி, "**அறிவுக்கெட்டாத அந்த கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்**" நாம் அவர்களை

மேலான வழியில் அதிகமதிகமாக நேசிக்கிறோம். அது அவர்கள் நமக்காக என்ன செய்திருக்கிறார்கள் என்பதை மதித்துப் போற்றுவதிலிருந்து மட்டுமல்லாமல், அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை விசேஷமாக அவர்களுடைய குணாம்சங்களை மதிப்புணர்ந்து போற்றுவதனால் உண்டாகிறது.

தெய்வீக குணாதிசயங்கள், திட்டம், பிரமாணம், மீதான நம்முடைய அன்பு அவர்களுடைய மகிமையான பண்புகளை உயர்வாகப் போற்றுவதோடு அவர்களிட மிருந்து பெற்றுக் கொண்ட நன்மைகளுக்கு பதில் செய்யும் பிரதி நன்றிக்கடமை நீதியிலும் கடமை அன்பிலும் தேவனுக்காகவும், கிறிஸ்துவுக்காகவும் ஜீவிப்பதில் தொடங்குகிறது. கூடுதலாக பிரதிபலன் பாராத, மதிப்பு ணர்ந்து போற்றும் அன்பாக வளருகிறது – இது உண்மையிலேயே அவர்கள் என்னவாயிருக்கிறார்களோ அதற்காக அவர்கள் மீது காட்டும் அன்பாகும். அவர்கள் ஒவ்வொருவருடைய மகிமையான குணாதிசய கிருபை-களைக் கற்று, பின்பற்றும்போது, நாம் அவர்களை மதித்து போற்றி, ஆராதித்து, துதிக்கிற ஊக்கமான அன்புடன் மேலும் மேலும் அதிகமதிகமாக நாம் அவர்களை நேசிக்க கற்றுக் கொள்வோம்.

ஆயினும், "முட்டாள்தனமான" அல்லது உலகத் தனமான ஞானத்தையல்ல, மாறாக மெய் ஞானத்தை கிறிஸ்தவ ஞானத்தை ஆராய விரும்புகிறோம். இந்த ஞானமே தேடுகிற விளக்காகிய தேவனுடைய வார்த்தை மற்றும் உண்மைகளின் வெளிச்சத்தின் கீழ், ஒருவனுடைய மனுஷீக பலவீனங்களையும், அபூரணங்களையும் கண்டுபிடிக்கவும், அதன் பின்பு கிறிஸ்துவின் மூலமாக "**தெளிந்த புத்தியுள்ள ஆவியைப்**" பெற்றுக் கொள்ள தேவனிடம் வருவதற்கு அவனுக்கு உதவுகிறது. "**உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.**" (2 தீமோ. 1 : 7; யாக். 1 : 5) என்று தேவனுடைய வசனம் உறுதியளிக்கிறது.

கிறிஸ்தவ ஞானம் என்பது, சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தத்துடன் இசைவாயிருக்கிற ஒரு இருதயத்தின் கட்டுப்பாட்டின் கீழ் மனதில் உணர்ந்து கொள்கிற ஒரு நல்ல மனநிலை என்று விளக்கலாம். அதாவது, தெய்வீகப் பிரமாணம், நோக்கம் மற்றும் திட்டத்தின் கோட்பாடுகளையும் கட்டளைகளையும் ஜாக்கிரதையாக கவனிப்பதுடன், தேவனுடைய ஞானத்தை கிறிஸ்துவின் மூலமாக, பயனுள்ளதாகவும், ஒழுக்கத்துக்கு ஏற்றதாகவும் ஏற்றுக் கொண்டு, இந்த உயர்வான நோக்கு நிலை யிலிருந்து நிதானித்து, சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தத் தின்படி செயல்படுகிற ஒரு இருதயமாகும்.


இங்கே தேவனைப் பிரியப்படுத்த விரும்புகிற எல்லாருக்கும் மிகப்பெரிய பாடம் ஒன்று இருக்கிறது. அது அவருக்குப் பிரியமாயிருக்கிற நம்முடைய விசுவாசமாகும். முதலில் நம்மிடத்தில் அதைத் தவிர வேறொன்றுமில்லை; ஆனால் விசுவாசம் மட்டும் தனித்திருந்து, நீதி மற்றும் பரிசுத்தமாகிய கனிகளை உருவாக்கும் முயற்சி செய்ய வில்லையெனில், அது செத்து, அழுகிய ஒன்றாக, தேவனுக்கும் மனிதனுக்கும் ஆகிய இரண்டு பேருக்குமே எதிரான அருவருப்பாகிவிடுகிறது. யாருடைய ஜீவியம் சுயத்தை திருப்தி செய்வதாகவும், பாவம் நிறைந்ததாகவும் இருக்கிறதோ, அது அவன் அறிக்கை பண்ணுகிற எந்த விசுவாசத்தையும் அவமதித்து, தீங்கு விளைவிக்கிறது. நீதிமானாக்குகிற விசுவாசம் நற்கிரியைகளுக்கு முந்தி இருக்க வேண்டும் என்கிற உண்மை எபே. 2 : 8–10–ல் அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகளில் காண்பிக்கப் படுகிறது: "**கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல, ஏனெனில் நற்கிரியை களைச்** (அதன் மூலம் அல்ல) **செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையா யிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.**" மெய்யான விசுவாசத்தின் மறுமொழி நற்கிரியைகளே.

மேலும், யாரெல்லாம் அவர்களுடைய விசுவாசத் துக்கு இசைவாக ஜீவிக்கத் தவறுகிறார்களோ, அவர்கள் நீண்டகாலம் அதைக் காத்துக் கொள்ள அனுமதிக்கப் படுவதில்லை என்பது எங்கள் அனுபவமாயிருக்கிறது. பலமான விசுவாசத்தைக் கொண்டிருப்பதாக அறிக்கை செய்கிறவர்களில் அநேகர் "**சத்தியத்தின் மீது அன்பும்**" தேவனுக்கென்று முழுமையான அர்ப்பணிப்பும் கொண் டிருப்பதில்லை, அத்துடன் இவ்வகையில் தேவனால் ஒழுங்குபடுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதும் நற்கிரியை களினால் வெளிப்படுத்தப்படுகிற மெய்யான விசுவாச முடையவர்களாகவும் இல்லை. அப்படிப்பட்டவர்களிடமே, அவர்கள் கொஞ்சம் விசுவாசம் உள்ளவர்களாக இருந்தும், நற்கிரியைகள் தொடர்பாக அதற்கொத்த முயற்சிகள் இல்லாததால் "**அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாகக் கொடிய வஞ்சகத்தை**" தேவன் அவர்களுக்கு அனுப்புகிறார்." (2 தெச. 2 : 10–12). தேவனுடைய ஜனங் கள் "**எல்லா மனிதர்களாலும் அறியப்பட்டு, வாசிக்கப்படுகிற ஜீவனுள்ள நிருபங்களாக**" இருக்கிறார்கள் என்பதை நாம் மறவாதிருப்போமாக, அதனால் விசுவாசத்தைக் காட்டிலும் மேலாக வாசிக்கப்படுவது கிரியைகளாகவே இருக்கின்றன, மேலும் இந்த பாடத்தின் முக்கியத்துவம், அதிகமதிகமாக கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொருவருடைய மன உணர்வாகவும் இருக்க வேண்டும் – "**நான் என் விசுவா–சத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன்.**" (யாக். 2 : 18).

நாம் உணர்ச்சிப் பெருக்கை கருத்தில் கொள்ளாமற் போனால் இந்த பாடத்தில் நாம் கவனக்குறை வுள்ளவர்களாக இருந்திருப்போம்! நிச்சயமாகவே, சரியான உணர்ச்சிப் பெருக்கு கிறிஸ்தவ ஜீவியத்தில்

# தற்பரிசோதனையின் சவால்

## செயல்படுத்துதல்




சுய ஒழுக்கப் பயிற்சி
ஜெபம்
ஆராதனை
வேத ஆராய்ச்சி
திறமைகள் மற்றும் தாலந்துகளை மதிப்பிடுதலும், பயிற்சி செய்தலும்.

சரியான இடத்தில் இருக்க வேண்டும், அது அதற்கு அத்தியாவசியமானது, ஒவ்வொரு கிறிஸ்தவனும் மனப் பூர்வமாக உணரப்பட்ட மதத்தையும், தனிப்பட்ட இரட்சிப்பின் மெய்யான அனுபவத்தையும் உடையவனாக இருக்க வேண்டும். பரிசுத்தமானதும், அனல் மிகுந்தது மான உணர்ச்சிப் பெருக்கின் செட்டைகளின் மீது ஒருபோதும் அமர்ந்திராத ஆத்துமா தெய்வீக நன்மை மற்றும் நற்கிரியைகள் மற்றும் தேவனுடன் ஒருவருடைய உறவு (ஐக்கியம்) ஆகியவற்றால் ஒருபோதும் அதன் ஆழம்வரை தூண்டப்படாததால் குமாரனுக்குரிய உறவின் ஆசீர்வாத பாக்கியத்தை ஒருபோதும் இன்னும் அனுபவிக்கவில்லை. அன்புடன், அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளும் ஒரு தகப்பனுடைய உண்மையான ஒரு குமாரன், இயல்பாகவே அன்பாதரவான உணர்ச்சியின் தணியாத பாசத்தை அனுபவிக்கிறான், விசேஷமாக, ஒரு உண்மையான தேவனுடைய பிள்ளை, தன்னுடைய பரம பிதாவில், ஒவ்வொரு கிருபையின் பூரணத்தையும், எல்லாவற்றுக்கும் மேலான, மகுடமாக விளங்கும் மகிமையையும் உணர்ந்து கொள்ளுவதால், அவன் அவருடன் நெருக்கமான தொடர்பிலும், ஐக்கியத்திலும், ஜீவிப்பதுடன் தேவனுடைய அன்பு மற்றும் அங்கீகாரத்திற்கு தன்னிடத்தில் நிலையான சாட்சியைக் கொண்டிருக்கிறான்.

நாம் எல்லாரும் உணர்ச்சிப் பெருக்கு உள்ளவர்களாயிருக்கிறோம். ஒவ்வொரு மனிதனும் ஒரு உணர்ச்சிப்பூர்வமான ஜீவிதான். அழுதல், சிரித்தல், களிகூருதல் போன்ற எல்லா தன்மைகளையும் தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார்; ஆனால் ஜனங்களில் ஏதேனும் இரண்டு பேர் ஒரே மாதிரியாக இராததினால், வளர்ச்சியில் அநேக தரங்களும், உணர்ச்சியை வெளிப்படுத்துவதில் அநேக அளவுகளும் இருக்கின்றன. சிலர் அழலாம், மற்றவர்கள் சிரிக்கலாம், மேலும் சிலர் அமைதியாக அமர்ந்திருக்கலாம், எல்லோருமே ஒரே காரியத்தை சமமாக அனுபவித்து மகிழ்கிறார்கள். சிலரிடம் உணர்ச்சிப் பெருக்கின் குறிப்பிடத்தக்க வெளிப்பாடு காணப்படுகிறது. வேறு சிலரிடம் அதே அளவிலான உணர்வுகள் இருந்தாலும் சிறிய அளவிலேயே உணர்ச்சி வெளிப்பாடு இருக்கும்; பிரபலமான பழமொழி ஒன்று இப்படியாகச் சொல்கிறது, "அலைகளற்ற அமைதியான தண்ணீர் ஆழமாக இருக்கும்" எனவே, நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்காதபடிக்கு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். உணர்வுகளை அதிகமாக வெளிப்படுத்துகிறவனாகவோ அல்லது குறைவாக வெளிப்படுத்துகிறவனாகவோ இருந் தாலும் ஒவ்வொரு கிறிஸ்தவனும், சத்திய அறிவு, சத்திய ஆவி ஆகிய இரண்டிலும் - அதாவது நீதியிலும், பரிசுத்தத்திலும் வளர்ச்சியடைய நாட வேண்டும்.

**சுய ஒழுக்கப் பயிற்சி** – *1 கொரி. 9 : 27, "**மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாத வனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.**"

**ஜெபம்** – *எபே. 6 : 18, "**எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்.**" 1 தெச. 5 : 17, "**இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்.**"

**ஆராதனை**– *சங். 73 : 16, 17, "**இதை அறியும்படிக்கு யோசித்துப் பார்த்தேன், நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கும் விசனமாயிருந்தது.**"

*யோவான் 4 : 24, "**தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்.**"

*எபி. 10 : 24, 25, "**மேலும், அன்புக்கும், நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து, சபை கூடிவருதலைச்சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்.**"

**வேத ஆராய்ச்சி**– *சங். 1 : 1-6, "**துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். துன்மார்க்கரோ அப்படியிராமல், காற்றுப் பறக்கடிக்கும் பதரைப் போல் இருக்கிறார்கள். ஆகையால் துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலை நிற்பதில்லை. கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார், துன்மார்க்கரின் வழியோ அழியும்.**"

*அப். 17 : 11, "**அந்தப் பட்டணத்தார்** (பெரோயாவிலிருந்தவர்கள்) **மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்**

**கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலி களாயிருந்தார்கள்."**

*2 தீமோ. 3 : 16, 17, "**வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதி யுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத் துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும், பிரயோஜனமுள்ளவைக ளாயிருக்கிறது."**

*1 பேது. 3 : 15, "**கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள். உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்."**

*யாக். 1 : 22-25, "**அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிறமனுஷனுக்கு ஒப்பாயிருப்பான். அவன் தன்னைத் தானே பார்த்து அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான். சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்."**

திறமைகள் மற்றும் தாலந்துகளை மதிப்பிடுதலும் பயிற்சி செய்தலும் – *ரோம. 12 : 1-3, 9, "**அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது: உங்களில் எவனானாலும், தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ண முள்ளவனாய் எண்ண வேண்டும். உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள்."**

*எபே. 4 : 14-16, "**நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திர முமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவி யாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது."**

*வேத வாக்கியங்கள் NKJV-யிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.


***

# பயத்திற்கான நிவாரணம்

*(The Remedy for Fear)*

**"அன்பிலே பயமில்லை: பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்: பயமானது வேதனையுள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல." 1 யோவா. 4 : 18.**

பயமானது பெரும் ஆபத்தானதாயிருக்கிறது. இது வாழ்க்கையின் எல்லா கவலைகளோடும் உலகத்தின் எல்லா குற்றங்களோடும் நெருங்கிய தொடர்பை கொண்டதாயிருக்கிறது. உண்மையான கிறிஸ்தவத்தின் ஆசீர்வாதங்களில் ஒன்று என்னவெனில், பயத்திலிருந்து அது கொடுக்கும் விடுதலையே ஆகும். ஆனால் மெய்யான கிறிஸ்தவம், மெய்யான கிறிஸ்தவ விசுவாசம், இவைகளின் தற்கால வெகுமதி ஆகியவை கிறிஸ்தவ மண்டலத்தில் கூட மிகப் பொதுவானதாக இல்லை. "**வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப் பாறுதல் தருவேன்**" என்ற எஜமானரின் வார்த்தைகளின் அர்த்தத்தை வெகு சிலரே அறிவர். "**ஆகையால் குமாரன்**



**உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலை யாவீர்கள்**" என்ற நிச்சயமான உத்திரவாதத்திற்கு வெகு சிலரே மதிப்பு கொடுக்கின்றனர்.

பயமானது பாவத்தில் தனது அஸ்திபாரத்தைக் கொண்டிருக்கின்றது. பரலோகத்தில் இருக்கும் தேவ தூதர்கள் பயமறியார்கள் என்பதை நாம் ஓரளவு நிச்சயிக்கலாம். தெய்வீக கட்டளைக்கு ஏதேனில் ஆதாம் கீழ்ப்படியாமற் போனபிறகு, அவன் தன்னை உண்டாக்கி னவருக்கு பயந்து தன்னை மறைத்துக் கொண்டான். அவ்வண்ணமாகவே "**எல்லாரும் பாவிகள்**" என்ற பொது வான புரிந்துணர்வின்படி, ஆதாமின் அனைத்து சந்ததி யினரையும் பயம் பாதித்திருக்கிறது. தேவனும் அவருடைய நீதியும், அடையாளமான வெளிச்சமாகவும், பாவிகளும் அவர்களுடைய பாவங்களும், அடையாளமான இருளாகவும் குறித்துக்காட்டப்படுகின்றன. இருளானது வெளிச்சத்தை வெறுக்கிறது (எதிர்க்கிறது). வெளிச்சமானது இருளை சிதறடிக்கிறது; இவைகளுக்கிடையே எந்த சமரசமும் இல்லை. அன்பும் பயபக்தியும் கைகோர்த்து செல்லும். ஆனால் அன்பும் பயமும் இசைவற்றவை; நாம் பயப்படும் ஒன்றை சிநேகிக்க நம்மால் முடியாது; நாம் சிநேகிக்கும் ஒன்றை பற்றி நாம் பயப்படோம். "**அன்பிலே பயமில்லை: பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்.**" (1 யோவா. 4 : 18).

நம்பிக்கை, பெருமை மற்றும் குறிக்கோள் ஆகியவை வர்த்தகரையும், தொழிலாளியையும், அரசனையும், உழவனையும், குடும்பத்தலைவியையும், வீட்டு வேலைக்காரியையும், சமுதாய அமைப்பின் தலைவர்களையும், பொறுமையான தாயாரையும் ஊக்கு விக்கின்றன. இருப்பினும் இவர்கள் அனைவரும் பயமாகிய இழுக்கக்கூடிய - நங்கூரத்தைக் கொண் டிருக்கின்றனர். அது அழுத்தம் நிறைந்த வாழ்க்கையில் கவலையை உண்டாக்குகின்றது. கவலை அஜீரணத்தை உண்டாக்குகின்றது. அஜீரணம் தூக்கமின்மையையும் பதட்டத்தையையும் உண்டாக்குகின்றது. அது எல்லா விதமான நோய்களுக்கும் மற்றும் சந்தாஷமின்மைக்கும் வழிநடத்துகிறது. ஆகவே, எந்த அளவுக்கு பயம் நீக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு ஆரோக்கியமும், சந்தோஷமும் ஊக்கப்படுத்தவும் உதவியூட்டவும் படு-கின்றன. பயமானது நோயோடு நெருங்கிய தொடர்பு கொண்டது என்ற உண்மையை எல்லா மருத்துவர்களும் புரிந்து கொண்டிருக்கின்றனர். எனவே ஒரு ஞானமுள்ள மருத்துவர் எப்போதும் நோயாளிக்கு குதூகலமான சூழ்நிலையையும், குதூகலமான கலந்துரையாடலையும் மனதை வேறு திசை திருப்பி, கவலை நிறைந்த சிந்தனைகளைத் தவிர்க்கவும் ஆலோசனை கூறுகிறார். இந்த ஒய்வு, குணமடைவதற்கான சிகிச்சையின் ஒரு பகுதியாகக் கூடும். ஒருவேளை கடினமாக இருப்பினும், கவலையானது நமது நெற்றியில் ஆழ்ந்த ரேகைகளை ஏற்படுத்திவிட அனுமதிக்கக் கூடாது.




இன்றைக்கு எஜமானரின் குணமாக்குதல் ஏன் சிறிதளவே எண்ணப்படுகின்றது? என கேட்கப்படலாம். 19 நூற்றாண்டுகளாக கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு வாக்குத்தத்தம் செய்த இளைப்பாறுதல், சமாதானம், ஆறுதல் மற்றும் சந்தோஷம் ஆகியவற்றிற்காக மாபெரும் மருத்துவரான அவரை நோக்கி ஏன் வெகு சிலரே கவரப்படுகின்றனர்? அவருடைய வார்த்தைகள் உண்மை யற்றவையாக நிரூக்கப்பட்டு இருக்கிறதா? மிகுந்த வியாகுலம் பிரச்சனை, பாரம், பிணி நிறைந்தவர்கள் மத்தியில் இருக்கும் அவருடைய சீஷர்கள் என்று வெளிப்படையாகக் கூறுபவர்களே தரித்திரர்களுக்காகவும், தவிக்கும் சிருஷ்டிகளுக்காகவும் கவலைப்படுகிறவர் களாகவும், அச்சம் கொள்கிறவர்களாகவும் இருக் கிறார்களா? அப்படியானால், விளக்கம் என்ன? நாம் யூகத்திற்கு இணங்க வேண்டும். அநேக வெளிப் படையான கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ மண்டலத்திற்கு வெளியே இருப்பவர்களை காட்டிலும் மிக அதிக கவலை நிறைந்தவர்களாகவும், மிக அதிக பயம் நிறைந்தவர் களாகவும், மிக அதிக பதட்டம் நிறைந்தவர்களாகவும், முன்கோபிகளாகவும், சுகவீனமுள்ளவர்களாகவும், இருக்கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். பெயரளவிலான கிறிஸ்தவ மண்டலமானது ஏற்றக் கால சத்தியத்தை தங்களுடைய ஊழியத்தில் அனுமதிக்க மறுத்து இருக்கின்றது என்ற உண்மையான காரணத்தினால், இந்த விளைவு ஏற்பட்டிருக்கிறது.

சீர்திருத்தவாதிகளின் காலத்தின் முடிவில் இருந்து, புராட்டஸ்ட்டாண்டுகள், தங்கள் வெளிச்சத்தில் நடப்பதற்கு பதிலாக, அவர்கள் தங்களுக்குப் பிரியமான தலைவர் களைச் சுற்றி தங்கி (தேங்கி) விட்ட காரணத்தால் குறைவான முன்னேற்றத்தையே அடைந்து இருக்கின் றனர். இந்த தலைவர்கள் தங்களால் இயன்றமட்டும் பார்க்க விரும்பியும் அவர்களால் கூடுதலாக பார்க்க இயலவில்லை. சத்திய பாதையில் அவர்கள் தங்களுடைய முன்னேற்றத்திற்கு வரம்பு நிர்ணயித்து, ஆதி சபையில் இருந்து பெருமளவு கொண்டுவரப்பட்ட தப்பறைகளுடன் கூடிய சிறிதளவு சத்தியத்தினால் அதற்கு வேலியடைத் தார்கள். பல வருடங்களுக்கு முன்னதாகவே மதக் கோட்பாடுகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுவிட்டதால் பெரும்

பான்மையான கிறிஸ்தவர்கள் குருட்டு நம்பிக்கை யுடனான பயபக்தியையே கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய திட்டத்தைப் பற்றி சீர்த்திருத்தவாதிகளால் அறியப்பட்டதை விட, கூடுதலாக ஒன்றும் அறிந்துவிட முடியாது என்று கருதுகிறார்கள். "**ஆனால் நீதிமான் களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்.**" (நீதி. 4 : 18). இந்த தவறுக்காக அவர்கள் கொடுத்த விலை அதிகம். ஏனெனில் குப்பையான தப்பறையில் இருந்து சில பெரிய சத்திய கோட்பாடுகள் மீட்டெடுக்கப்படுகிறது என்ற உண்மை ஒரு பக்கத்தில் இருந்தாலும் சத்தியத்தின் பிரத்யேக அம்சங்கள் தொடர்ச்சியாக வெளியாகி கொண்டிருக் கின்றன. இந்த கிறிஸ்தவர்கள் தங்களுடைய மதக் கோட்பாட்டு வேலியால் சீர்க்கேடடைந்து இருக்கிறார்கள்.

இந்த கருத்தை இவ்விதம் விளக்கலாம். நோவா காலத்திலும் சத்தியம் இருந்தது. அந்த சத்தியத்திற்கும், வெளிச்சத்தில் நடக்கும் அனைவரிடத்திலும் இருக்கும் விசுவாசம் தேவைப்பட்டது. ஜலப்பிரளயம் வந்து கொண்டிருந்தது என்பதே அந்த சத்தியம். ஆதாமும் மற்றவர்களும் இதை குறித்து ஒன்றும் அறியாது இருந்தார்கள். ஜலப்பிரளயம் வந்து கொண்டிருக்கிறது என்பது இப்போது போதிக்க வேண்டிய போதனையாக இல்லை. ஆனால் மற்ற நேமகத்து (உலகத்து) சத்தியங்கள் தொடர்ச்சியாக வெளியாகி கொண்டிருக்கின்றன. நாம் தீபத்தின் வெளிச்சத்தில் நடந்து கொண்டிருந்தால், அவற்றை நாம் அறிந்து கொள்வோம் ("**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.**" சங். 119 : 105). பல நூறு வருடங்களுக்கு முன்பு வெளியாகிய எல்லா வெளிச் சத்தையும் மட்டுமே நாம் கொண்டிருந்தோமானால் நிச்சயமாகவே, நாம் அளவிடத்தக்க இருளில் நடந்து கொண்டிருக்கிறோம்.

ஒரு காலம் வந்தது, அப்போஸ்தலர்கள் நித்திரையில் சென்ற பின்பு, பெரும்பான்மையான சபை யானது தீபத்தை புறக்கணிக்க தொடங்கி, வழி காட்டுதலுக்கு மானிட போதனையாளர்களை நோக்கத் தொடங்கியபோது, இந்த போதனையாளர்கள் பெருமை யினால் தலைக்கனம் கொண்டு, பட்டங்களையும் உத்தியோகங்களையும் தங்களுக்கென்று ஏற்றுக் கொண்டு தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆள தொடங்கினார்கள். பின்பு படிப்படியாக "மதகுருமார்" எனும் பிரத்யேக வகுப்பாக வாழத் (மாற) தொடங்கினர். இந்த மதக்குருமார்கள், தேவனுடைய வார்த்தைக்கு அப்பால், விசுவாசத்திற்கும் கடைபிடித்தலுக்கும் சரியான வழிகாட்டியாக தங்களை எண்ணினார்கள், மற்றவர் களாலும் எண்ணப்பட்டார்கள். இந்த நேரத்தில் தவறாமை யுள்ள தேவனுடைய வார்த்தையை புறக்கணித்து, தவறிழைக்கும் மனித போதனைகளின் மீதான தகாத மதிப்பினால் போப்பு மார்க்கம் எனும் பெரும் அமைப்பு வளர்த்தெடுக்கப்பட்டது.

இந்த விசித்திர சூழலைப் பற்றி இன்னொரு கண்ணோட்டம் என்னவெனில் கிறிஸ்தவ மண்டலம் என்பது கிறிஸ்தவம் அல்ல. கிறிஸ்தவ மண்டலம் எனும் பெயர் தவறாக பயன்படுத்தப்படுகிறது! மனுக்குலத்தின் "நாகரீகமடைந்த" பகுதியின் மத்தியில் கிறிஸ்துவின் ராஜ்யம் பரவி இருக்காது. பல நூற்றாண்டுகளாக, கிறிஸ்தவ மண்டலம் தன்னைத் தானே ஏமாற்றிக் கொண் டிருக்கிறது; மேலும் அது கிறிஸ்துவையும் அவருடைய போதனைகளையும், மேலும் "**உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம்........ பூமியிலேயும் செய்யப் படுவதாக**" என்று இன்னும் நாம் ஜெபித்துக் கொண் டிருக்கிற அவருடைய வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நீதியின் ராஜ்யத்தையும் முற்றிலும் தவறாக பிரதி நிதித்துவப்படுத்தி இருக்கிறது. ஒருவரையொருவர் அழிப்பதற்காக தயார்ப்படுத்தப்பட்டுள்ள பெரிய இராணு வங்களும், அடித்து நொறுக்கி அணுக்களாக சிதறடிப் பதற்காக தயார் படுத்தப்பட்டுள்ள கப்பல் படைகளும், திரளான வானூர்தி படைகளும், அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்களும், ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானங்கள் போன்றவைகள் அனைத்தும், மனித நாகரீகத்தை கிறிஸ்துவின் ராஜ்யம் என அழைப்பது தவறு என்று நிரூபிக்கின்றது.

இவ்வண்ணமாகவே, பயம் மற்றும் கவலைக்கான மாபெரும் போதகரின் விஷமுறிவு மருந்தானது கிறிஸ்தவ மண்டலத்தின் பெருங்கூட்டத்தினால் எடுத்துக்கொள்ளப் படவில்லை என்பது கிறிஸ்தவ மண்டலத்தின் கவலை, பயம், துக்கம், பதட்டம் போன்றவற்றால் நிரூபணமாகிறது. பாவம், சிதைந்து கொண்டிருக்கும் அக்கறை கவலை, பயம் ஆகியவற்றுக்கான நல்ல மருத்துவரின் நிவாரண மானது 19 நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்ததைப் போன்றே இன்னும் செயலாக்கத்தில் தான் இருக்கிறது என்பதை நாங்கள் நம்புகிறோம். உண்மையான கடினம் என்னவெனில் அவருடைய பரிந்துரையானது விசுவாசத் துடன் பின்பற்றபடவில்லை என நாங்கள் நம்புகிறோம் "**கேட்கிறதற்கு காதுள்ள**" அனைவரும் அவருடைய செய்தியை விசுவாசத்துடன் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் "**இதைப் போன்றே நல்லது**" என்று கூறும் இன்னொரு பரிந்துரையை யாருடைய கையிலிருந்தும் அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும் நாங்கள் அறிவுறுத்துகிறோம். கர்த்தருடைய வார்த்தையின் ஒப்புதலை தாங்கியும் "**விலையேறப்பெற்ற இரத்தத்தின்**" முத்திரையை கொண்டும் இருக்கின்ற நிவாரணத்தை நாம் பெற்றுக் கொள்கிறோமா என நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த தீங்கிழைக்கும் பயத்திற்கு ஒரே ஒரு தெய்வீக நிவாரணம் மட்டுமே உள்ளது. அந்த நிவாரணம்

## மனங்கள் பாராசூட்களைப் போன்றவை - அவைகள் திறக்கப்படும் பொழுது மாத்திரமே வேலை செய்யும்

கிறிஸ்துவின் சுவிசேஷத்தோடு தொடர்புடையது. ஆனால் எண்ணற்ற உபாயங்கள் உள்ளன. சிலர் மதுபானம், அல்லது போதை வஸ்துக்களால் அவர்களுடைய பயங்கள், ஏமாற்றங்கள் மற்றும் கவலைகளை மூழ்கடிக்கின்றனர். சிலர் அவைகளை புலன் சார்ந்த இன்பத்தாலும், வர்த்தக செயல்பாடுகளினாலும் சபை சம்பந்தமான செயல்பாடுகளாலும் கண்மூடித்தனமான செயல்களினாலும் மூழ்கடிக்கப்பார்க்கின்றனர்.

ஒரு குறிப்பிடத்தக்க அளவில், உபாயத்தின் வெற்றியானது வஞ்சகத்தின் வழியில் வருகிறது. ஆதாவது பாவத்தின் இருத்தலை மறுப்பதின் வழியாக வருகிறது. அதாவது ஓரினச் சேர்க்கை சமுதாயத்தினருக்கும், ஒரு பாலின திருமணங்களுக்கும் நேராக ஒரு திறந்த கதவு கொள்கையையே பல பெயரளவிலான சபை ஒழுங்குகள் கொண்டிருக்கின்றன. இவ்வாறாக இந்த காரியம் சம்பந்தமான வேதாகமத்தின் உண்மைகளை மறுக் கின்றன. இந்த சுய வஞ்சகத்தின் விளைவானது உண்மையில் ஒரு குறிப்பிடத்தக்க அளவு பயத்திலிருந்து விடுதலையை கொடுக்கிறது. இந்த அளவில் இது ஒரு ஆறுதலாகவும் திருப்தியாகவும் நிரூபணமாகிறது. ஆனால் இது ஒரு உபாயமே அன்றி உண்மையான நிவாரணம் ஆகாது. மனதின் மீதும், பகுத்தறிவும் மனத்திறன் மீதுமான இதன் பாதிப்பு (செல்வாக்கு) கெடுதி ஏற்படுத்துகிற ஒன்றாகும். கருப்பை வெண்மை என்றும், வலியை இன்பமாகவும், பாவத்தை நீதியாகவும் அழைக்கும் இந்த கொள்கைக்கு தேவைப்படுகிற பகுத் தறிவை திரித்தலானது, தெளிந்த பகுத்தறியும் திறனை அழிக்கக்கூடியதாயிருக்கிறது. இந்த நெறி பிறழ்வு பழக்கவழக்கமானது மனதுக்கு தீங்கு விளைவிப்பதோடு மட்டுமல்லாமல், வேத வாக்கியங்களுக்கு பதிலாக இந்த பழக்கத்தையே நீடித்திருக்க முயற்சித்து தேவனுடைய முழு வார்த்தைகளையும் புரட்டி போடுகின்றன. பகுத்தறிவு புரட்டப்பட்டு, வேத வாக்கியங்கள் புரட்டப்பட்ட பின்பு வேத வாக்கியங்களின் உண்மையான செய்தியை அனுபவிக்க முடியாது. பயமானது நியாயமான அளவில் அகற்றப் படாவிட்டால், சரியான விசுவாசம், நம்பிக்கை, சந்தோஷம் மற்றும் தெளிந்த புத்தியின் ஆவி ஆகியவை சாத்தியமில்லை.

நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக இஸ்ரயேலருக்கு கொடுக்கப்பட்ட தேவனுடைய செய்தியானது, இயேசுவும் அவருடைய அப்போஸ் தலர்களும் அர்த்தம் கூறுகிறபடி, பயத்துக்கான உண்மை யான விஷமுறிவு மருந்தை நமக்குத் தருகிறது. இது பாவத்தையும், வியாதியையும், கவலையையும் மரணத் தையும் மறுக்காமல்; உண்மையையும் மறுக்காமல், ஆனால் இவைகளெல்லாவற்றிற்கும் நிவாரணத்தை கொண்டிருக்கிறது. இந்த விஷமுறிவு (மாற்று மருந்து) தேவனுடைய வார்த்தையில் வைக்கும் நம்பிக்கை என்று அழைக்கப்படுகிறது. கூடுதலாக நம்முடைய மனம் மற்றும் இருதயத்தின் ஒத்துழைப்பின் மூலமே இந்த விஷமுறிவை (மாற்று மருந்தை) பெற்றுக்கொள்ள முடியும் என்று இது நமக்கு தெரிவிக்கிறது, தற்காலத்தில், ஒப்பிடத்தக்க அளவில் சிலரால் மட்டுமே இந்த சொஸ்தமாகுதல் பெற்றுக் கொள்ளக்கூடியதாய் இருக்கிறது என்று இது நமக்கு தெரிவிக்கிறது. "**ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலை நிற்கிறது: கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தை சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது.**" (2 தீமோ. 2 : 19). முடிவில், தெய்வீக ஆசீர்வாதமானது, உலகளாவிய அளவில், பாவத்தின் தண்டனையாலும் அதன் விளைவினாலும் முழுவதும் நிரம்பி இருக்கிற எல்லா மனுக்குலத்தை நோக்கி செயல்படும். அது இப்பொழுது, யேகோவா தம்மிடத்தில் இழுத்துக் கொண்டிருக்கிறவர்களிடத்திலும், கேட்கிறதற்கு காதுள்ளவர்களிடத்திலும், விசுவாச கண்கள் உள்ளவர்களிடத்திலும், அதனைப் பாராட்டி மறுமொழி கூறும் இருதயமுள்ளவர்களிடத்திலும் மட்டுமே (முழு அளவில்) செயல்படுகிறது. மற்றவர்கள், இந்த ஆறுதலை ஒரு குறிப்பிட்ட அளவில் மட்டுமே தற்காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பயத்திலிருந்து இந்த விடுதலைக்கான ஒரு திறவுகோலை மாபெரும் போதகர் நமக்கு கொடுத்து இருக்கிறார். அவர் இவ்வண்ணமாக கூறுகிறார் "**சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலை யாக்கும்... குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்**" (யோவா. 8 : 32, 36). அறியாமை மற்றும் மூட நம்பிக்கையாகிய மேற் பூச்சுமானத்தை நீக்குவதே நம்மை விடுதலையாக்கும் சத்தியத்திற்கு நேராக நாம் எடுத்து வைக்கும் முதல் படியாகும்; இது ஒரு கடினமான காரியமாகும். உதாரணமாக, கத்தோலிக்க குருட்டு நம்பிக்கையான உத்தரிப்பு ஸ்தலம் மற்றும் கத்தோலிக்க புரட்டஸ்ட் டண்டுகளின், மேலும் வழக்கத்தில் எல்லா மனுக்குலமுமே கொண்டிருக்கின்ற குருட்டு நம்பிக்கையான நித்திய வேதனை ஆகியவைகள் அவர்களுடைய பொய்யான மற்றும் பெருத்தமற்ற போதனைகளில் முழுமையாக இறுக்கப்பட்டு-கடாவப்பட்டு இருக்கிறது. அவர்களின் கட்டுகளை உடைத்து, விடுதலையாக்குவது என்பது கடினமான பணியே.

"**நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு**




**முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு"** (2 தீமோ. 2:15) என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. ஆண்டவர் மீதும் அவருடைய நீதியின் மீதும் பசிதாகம் கொண்டவர்கள் மட்டுமே எவ்விதத்திலும் சரியாக விடுவிக்கப்படுகிற வண்ணமாய் யேகோவா அவருடைய இரட்சிப்பின் திட்டத்தை வடிவமைத்து இருக்கிறார். 2 தீமோ. 1 : 7 கூறுகிற வண்ணமாக, **"தேவன் நமக்கு** (பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளுக்கு) **பயமுள்ள ஆவியை கொடாமல், பலமும் அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்."**

தெளிந்த புத்தியில்லாத அநேகர், ஒரு தப்பறையிலிருந்து விடுதலை பெறும்போது, கெடுதலான அல்லது மோசமான இன்னொரு தப்பறையை நோக்கி எதிராளியால் சாதாரணமாக திசை திருப்பப்படுகிறார்கள். தற்காலத்தில் தேவன் இப்படிப்பட்டவர்களைத் தேடவில்லை. ஆயினும் சாத்தான் முழுமையாக கட்டப்படும் பொழுது மேசியாவின் மகிமையான ராஜ்யத்தின்கீழ் கொஞ்சம் கொஞ்சமாக இப்படிப்பட்டவர்களுடன் தேவன் இடைபடுவார் (வெளி. 20 : 1-3). இப்பொழுது **"ஆவியோடும் உண்மையோடும் அவரை தொழுது கொள்ள வேண்டும்"** என்கிற வண்ணமாக அவரை தொழுது கொள்கிறவர்களையே தேவன் நாடுகிறார்; **"கர்த்தருடைய இரகசியம் அவருக்கு பயந்தவர்களிடத்தில்** (பயபக்தியுள்ளவர்களிடத்தில்) **இருக்கிறது: அவர்களுக்கு தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்"** (சங். 25 : 14). பாவத்தின் தண்டனையிலிருந்தும் (ரோம. 8 : 1) மூட நம்பிக்கை மற்றும் பயத்தின் கட்டுகளிலிருந்தும் அவர்களை அவர் இப்போது விடுவிக்கிறார். கொஞ்சம் கொஞ்சமாக, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட உயிர்த்தெழுதலில் பாவத்தின் வல்லமையிலிருந்தும் அதன் விளைவுகளில் இருந்தும், யேகோவா அவர்களை விடுவிப்பார். **"உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள், உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் இழுந்து போனதைத் திரும்பக் கொடுக்குங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்."** (அப். 3 : 19-21). See English Bible.

மற்றபடி, தற்காலத்தில் எல்லா மனுக்குலமும், தெய்வீக சத்தியத்தின் அறிவுக்கு அவர்கள் வரக்கூடிய அளவுக்குத்தக்கதாக இருதய ஆறுதலை பெற்றுக் கொள்ளலாம். அவனுடைய **"நீதியின்மேல் பசிதாக"**த்தின் (மத். 5 : 6) (அவனுடைய ஆத்துமாவின் நேர்மை) அளவுக்குத் தக்கதாக சத்திய அறிவுக்கு உதவி செய்யப்படுவார்கள். நேர்மையற்ற இருதயமுள்ளவர்கள் பயத்திலிருந்து விடுதலை பெற பாத்திரவான்கள் அல்லர். தற்கால பாவமான மற்றும் சுயநலமான சூழ்நிலைகளின் கீழ் இவர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ பயத்திலிருந்து சுதந்திரம் மற்றும் விடுதலையானது, அனுகூலமாயிராது.

தேவன் தற்காலத்தில் முன்வைக்கிற மேலான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள, குறிப்பிட்ட கடினமான தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். பாவமானது (பாவத்திற்காக) இருதயபூர்வமாக மனந்திரும்பப்பட வேண்டும். இயன்ற அளவில் இழப்பீடு - நிவாரணம் செய்யப்பட வேண்டும். அதாவது, இயன்ற மட்டும் பாவமானது கைவிடப்பட வேண்டும். பின்பு **"உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியையும்"** இயேசுவின் மரணத்தில் தேவன் தாமே அளித்த பாவத்துக்கான மரணத்தை உணர்ந்து அதை விசுவாசிப்பதும் அவசியமாகும். விசுவாசமும் அறிவும் இன்னும் முன்னோக்கி சென்று மீட்பரின் மரணத்தை கண்டு ஏற்றுக் கொள்வதோடு மாத்திரமல்லாமல் அப். 3 : 19-21-ல் கொடுக்கப்பட்டிருக்கிறபடி நியாயப்பிரமாணத்தாலும் தீர்க்கதரிசிகளாலும் முன்னுரைக்கப்பட்ட ஆச்சரியமான ஆசீர்வாதங்களை எல்லா மனுக்குலத்துக்கும் மீட்பர் அளிக்க வேண்டும் என்ற நோக்கில் தேவன் அவரை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பி மறுபடியும் ஆவிக்குரிய நிலைமைக்கு அவரை உயர்த்தினார் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். **"ஆதிமுதல் அடக்கமாயிருந்து, இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே அநாதி தேவனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டதும், சகல ஜாதிகளும் விசுவாசத்திற்கு கீழ்ப்படியும்படி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷத்தின்படியே உங்களை ஸ்திரப்படுத்த வல்லவர்...."** என்று ரோம. 16 : 25-ல் ஒரு இரகசியத்தை நாம் வாசிக்கிறோம். மேலும் கொலோ. 1 : 25-ல் **"ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியம் ...."** என்று வாசிக்கிறோம். இந்த இரகசியமானது, இயேசு அவருடைய சரீரமாகிய சபையின்மேல் தலையாக, முதன்மையானவராக, ஆண்டவராக இருக்கிறார் என்பதும் இந்த "சரீர" அங்கத்தினர்கள் அவரோடு கூட ஆவிக்குரிய நிலைமையில் மகிமைப்பட்டு அவரோடு பெரிய மேசியாவாக ஆகி உலக மனுக்குலத்தை உயர்த்தும் ஆசீர்வாதங்களை

விளைவிக்கும் ஆயிரவருட ஆவிக்குரிய அரசாட்சி செய்வார்கள் என்பதுமேயாகும்.

வேதாகமத்தை முழுமையாக சரியாக புரிந்து கொள்ள வேண்டுமெனில், தேவன் இரண்டு இஸ்ரயேலர் களை, அதாவது பூமிக்குரிய மற்றும் பரலோகத்துக்குரிய இஸ்ரயேலர்களை முன்குறித்து இருக்கிறார் என்பதை பகுத்துணர்வது அவசியமாகும். இரண்டுபேருமே விலை யேறப் பெற்றவர்களாகவும், இரண்டு பேருமே "**தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகவும்**," மேசியாவின் ராஜ்யத்தில் இரண்டு பேருமே அதாவது ஒருவர் பரலோகத்துக்குரிய நிலையிலும் மற்றவர் பூமிக்குரிய நிலையிலும் யேகோவாவால் உபயோகப்படுத்தப்படுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். பூமிக்குரிய இஸ்ரயேலர்களை புரிந்து கொண்டு பரலோகத்துக்குரிய அல்லது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை புரிந்து கொள்ளாமல் இருப்பதின் மூலமாக சிலரால் ஒரு தவறு இழைக்கப்பட்டு இருக்கிறது. பரலோகத்துக்குரிய அல்லது ஆவிக்குரிய இஸ்ரயேலர் களை புரிந்து கொண்டு பூமிக்குரிய இஸ்ரயேலர்களை புரிந்து கொள்ளாமல் இருப்பதின் மூலமாக மற்றவர்களால் தவறு இழைக்கப்பட்டு இருக்கிறது.

ஆபிரகாமின் எல்லா வித்திற்கும் தேவனுடைய வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கிறது, அதாவது ஆபிர காமின் விசுவாசத்தின் அடிப்படையிலான ஆபிரகாமின் சந்ததிக்கும், மேலும் நியாயப்பிரமாணத்தின் அடிப் படையிலான மாம்ச வித்திற்கும் தேவனுடைய வாக்குத் தத்தம் நிச்சயமாயிருக்கிறது. "**ஆதலால், சுதந்தரமானது, கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும்படிக்கு அது விசுவாசத்தி னாலே வருகிறது: நியாயப்பிரமாணத்தை சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்கு மாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தை சார்ந்தவர்களான எல்லா சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படி அப்படி வருகிறது**" (ரோம. 4 : 16). ஆவிக்குரிய வித்தானது முதலில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஏனெனில் ஆசீர்வாதமானது பரலோக வித்திலிருந்து தொடங்கி பூமிக்குரிய வித்துக்கு வந்து, பின்பு பூமிக்குரிய வித்திலிருந்து எல்லா ஜாதியினரையும் சென்றடையும். எல்லா ஜாதிகள் மீதும் வரும் இந்த ஆசீர்வாதமானது, கடற்கரை மணலைப் போல முடிவில், நித்திய ஜீவனுக்கு பாத்திரவான்களாய் காணப்படும், எல்லா ஜாதிகளின் இரட்சிக்கப்பட்டவர்களை உள்ளடக்கிய பூமிக்குரிய வித்தின் அங்கத்தினராக ஆவதற்கு கொடுக்கப்படும் வாய்ப்பை கொண்டதாகும். "**அநேக ஜாதிகளுக்கு உன்னை** (ஆபிரகாமை) **தகப்பனாக ஏற்படுத்தினேன்.**" (ரோம. 4 : 17).

தேவனுடனான தொடர்பாகிய இந்த ஆசீர்வாத மான அனுபவத்திற்கு வரும் அனைவரும் இவ்விதமாக ஏசா. 43 : 1-ல் விவரிக்கப்படுகிறார்கள். "**பயப்படாதே, உன்னை மீட்டுக் கொண்டேன்: உன்னை பேர் சொல்லி அழைத்தேன்: நீ என்னுடையவன்**" உபத்திரவத்தின் ஆழமான தண்ணீரை கடந்தவர்களும், அக்கினி போன்ற சோதனையினூடே நடந்தவர்களுமான இந்த சுவிசேஷ யுகத்து விசுவாசமுள்ளவர்களாகிய சொற்பபேர் அவை களினால் காயப்படாமல் கடந்து வந்தது மாத்திரமல்ல, அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டும் இருக்கிறார்கள். ஆம் வரக்கூடிய ராஜ்ய வெகுமதியாக அபரிதமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர்கள் பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

இதைப் போலவே, மாம்ச இஸ்ரயேலர்கள் (யூத ஜாதியினர்) ஒரு ஜனமாக, குறிப்பாக ஆபிரகாமின் காலத்திலிருந்து மேசியாவை அவர்கள் புறக்கணித்த காலம் வரைக்கும் அனுகூலமடைந்திருந்தனர் அதாவது குறிப்பாக அவர்களில் பரிசுத்தமான சிலர் இந்த அனுகூலத்தை பெற்றிருந்தனர்; மகிமையின் பெரிய ராஜாவால் பூமியனைத்திலும் பிரபுக்களாக ஏற் படுத்தப்படும் அவர்களின் தனிச்சிறப்பே அவர்களின் நிச்சயமான வெகுமதியாயிருக்கும்; "**உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்: அவர்களை பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்**" (சங். 45 : 16). இஸ்ரவேல் ஜாதியினர் ("யாக்கோபு") சுவிசேஷ யுக காலத்தில், சோதிக்கும் அனுபவங்களாகிய "உபத்திரவத்தின் தண்ணீர்" மற்றும் "அக்கினி போன்ற சோதனைகளின்" வழியாக கடந்து போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போதும்கூட ஆண்டவர் அவர்களை கைவிடவில்லை. ஒரு ஜனங்களாக அவர்களை அவர் சேர்த்தே வைத்திருந்தார். அவர்களுடைய சத்துருக்களால் அவர்கள் அழிக்கப் படும்படி அவர் அவர்களை ஒப்புக்கொடுக்கவில்லை. 35 நூற்றாண்டுகளாக அவர்கள் நிலை பெற்று இருப்பதே தெய்வீக மேற்பார்வையின் ஒரு அற்புதமாயிருக்கிறது. உபத்திரவம் இல்லாமல் இருந்திருந்தால் ஒரு தனித் தன்மை உள்ள ஜனங்களாக இல்லாமல் அழிந்து போயிருப்பார்கள். இந்த வரலாற்றை எரே. 30 : 11 இவ்வாறாக கூறுகிறது "**உன்னை** (மாம்ச இஸ்ரயேலர் களை) **இரட்சிப்பதற்காக நான் உன்னோடு இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்: உன்னை சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்: உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும் முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய் தண்டிப்பேன்.**"

சுவிசேஷ யுகம் (கி.பி. 29 - கி.பி. 1874, ஆவிக்குரிய இஸ்ரயேலரின் தெரிந்தெடுத்தலுக்காக) முடிவை நெருங்குகிற நேரத்தில் (விரிவடைந்த சுவிசேஷ யுக அறுவடையின் போது) தேவனுடைய சத்தமானது மாம்ச இஸ்ரயேலர்களை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நிலத்தை நோக்கி அழைத்துக் கொண்டே இருக்கிறது. அவர்களுடைய தீர்க்கதரிசிகளின் செய்தியினால் அவர் களுடைய இருதயங்களை எழுப்பி பரிசுத்த நிலத்தை நோக்கி திரும்பி வர விளைவிக்கின்றது.

எல்லா மனுக்குலமும் முடிவில் தேவனுடைய

ஆசீர்வாதத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும். பிறகு எல்லாரும் பயமின்றி இருக்கலாம். இப்போது தேவனை அறிந்திருக்கிறவர்கள் பயப்படாமல் இருப்பதற்கான காலமாயிருக்கிறது. "**தேவ தூதன் அவர்களை நோக்கி, பயப்படாதிருங்கள் இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.**" (லூக். 2 : 10). இப்போது விசுவாசம் மற்றும் புரிந்துகொள்ளுதலின் கண்களை கொண்டிருக்கிறவர்கள், அதன் மூலம் மனுப்புத்திரர்களை தெய்வீக திட்டத்தில் வழிநடத்துவதில் தேவனுடைய கம்பீரமான நடைகளை பகுத்துணர முடிகின்றதால், பயமின்றி களித்திருக்கலாம். இப்போது இவர்கள் நல்ல தைரியத்தோடு இருந்து பயமடையாமல், உலகத்தை மேற்கொண்டு நீதிக்காகவும் சத்தியத்திற்காகவும் தைரியமாக இருக்க வேண்டிய காலமாகும், அவர்கள் ஆண்டவருடைய ஆசீர்வாத மானது, அவர்களுடைய விசுவாசம் மற்றும் தைரியத்தின் அளவுக்குத்தக்கதாக இருக்கும். இயேசு அழைக்கிற உண்மையான இளைப்பாறுதலுக்கும் சமாதானத்துக்கும் வேறு பாதைகள் இல்லை. மேலும் "**என்னிடத்தில் வாருங்கள்**" என்ற ஆண்டவருடைய வாய்ப்பை ஏற்றுக் கொள்ள சிறந்த காலம் இப்போதை விட வேறெப் போதாகவும் இருக்க முடியாது. இந்த வாய்ப்பை ஏற்றுக் கொள்கிறவர்கள் பாக்கியவான்களாயிருக்கிறார்கள்.

பிலி. 2 : 12-ல் அப்போஸ்தலர் பவுல் கொடுத்த வசனத்திலிருந்து இந்த சிந்தனைகளை முடிக்கிறோம். "**ஆதலால் எனக்கு பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்கு சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும் அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள்.**" பிலிப்பிய சபையின் அன்பான கீழ்ப்படிதலின் காரணமாக அப்போஸ்தலர் அவர்களுக்கு கொடுத்த இந்த அன்பான புத்திமதியை நமக்கும் பயன் படுத்திக் கொள்வோம். பிலிப்பிய சபையின் அன்பான நம்பிக்கை பயமற்றிருந்ததென்று நாம் புரிந்து கொள்கி றோம்; இதில் கொடுக்கப்பட்டிருக்கிறவாறு, அவர்கள் சத்தியத்திற்கு கீழ்ப்படியும் அன்பான கீழ்ப்படிதலின் மூலம், தொடர்ந்து எல்லா காலத்திலும் அதற்கு கீழ்ப்படிதலோடு இருக்க அவர்களால் இயன்றது. இது தேவனால் கொடுக்கப்படும் தனிச்சிறப்பாகவும் இருக்கிறது. நாம் தேவனுடைய வார்த்தையின் கொள்கைகள் மற்றும் அதன் ஆவியின் மீதான நம்முடைய உண்மைத்து வத்தை, மாம்சம் மற்றும் ஆவியின் எல்லா அசுசியையும் நீக்கி போடுவதின் மூலமாக காண்பிக்க வேண்டும். மேலும் நாம் நம்முடைய இரட்சிப்பை பயத்தோடும் நடுக்கத் தோடும் கிரியை செய்ய வேண்டும்; நாம் அப்படிச் செய்தால், சுய வெறுப்பைக் கற்றுக்கொள்வதோடு, ஆவியின் கனிகளை வெளிப்படுத்தி, கிருபைகளில் வளர்வோம். ***




## Laymen's Home Missionary Movement

General Convention at Nazareth - 2016 (Oct 7,8,9)

**தங்களுடைய பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொள்ளும்படியாக மற்ற மாநிலங்களிலிருந்தும் பல்வேறு LHMM எக்லீஷியாக்களிலிருந்தும் இந்த கன்வென்ஷனில் கலந்து கொள்ள வந்திருக்கும் கர்த்தருக்குள் அன்பான சத்திய சகோதர, சகோதரிகள் யாவரையும் அன்புடன் வரவேற்கிறோம். தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக. (மத். 24:28; சங். 133)**

Visit us at : **www.biblestandardindia.com**


***For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :***

**Bro. V. Vincent Jeyakumar**

**Laymen's Home Missionary Movement**

#11/119-3, Near Water tank, South Street, Mukuperi - 628 616
(Near Nazareth), Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629



**FOR PRIVATE CIRCULATION ONLY**